# சீவக சிந்தாமணி

## மண்மகள் இலம்பகம்

### நூல் - விளக்கம்.

சிந்தாமணி என்னும் தெய்வமணி வேண்டுவன எல்லாம் அளிக்கும் இயல்புடையது. அதுபோல, சிந்தாமணி என்னும் காப்பியமும் அதனைக் கற்பார் விரும்பும் உறுதிப் பொருள்கள் அனைத்தையும் அளிக்கும் இயல்புடையது. காப்பியத்தலைவன் சீவகன் பிறந்த போது 'சீவ' எனத் தெய்வம் வாழ்த்தியதாலும், 'சிந்தாமணியே! கிடத்தியதால்' என்று தாய் கூறியதாலும் இவ்விரண்டு சொற்களும் பொருந்த இக்காப்பியம் 'சீவக சிந்தாமணி' என்னும் பெயர் பெற்றது.

### திருத்தக்கதேவர்

சீவக சிந்தாமணி என்னும் ஒப்பற்ற காப்பியத்தைத் திருத்தக்கதேவர் எழுதியது பற்றிய குறிப்புச் சமணரிடையே பரவலாக வழி வழியாக அறியப்படுகிறது. திருத்தக்கதேவர் சோழர் குடியில் தோன்றியவர். இளமையிலேயே கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கியவர். சமண சமயத்தைச் சார்ந்தவர். விருத்தப் பாடல்களைக் கொண்டு பெருங்காப்பியம் பாடியவர்களில் திருத்தக்கதேவர் முதல்வராவார். காப்பியங்களில் 'இலம்பகம்' என்ற உட்பிரிவினைச் சீவக சிந்தாமணியில் மட்டுமே காணலாம். காலம் ஒன்பதாம் நூற்றாண்டு.

### மண்மகள் இலம்பகம்

விதேக நாட்டை அடைந்த சீவகன் தன் மாமன் கோவிந்தன், மற்றும் மக்களைக் கண்டு அமைச்சர்களுடன்

இவ்வாறு ஆலோசனை செய்து போர்க்களத்தில் கட்டியங்காரனுடன் போர்புரிந்து வெற்றி பெற்றதைச் சிறப்பிக்கும் பகுதி இது.

## சீவகன் நிலங்களைக் கடந்து போதல்

### நெய்தல் நிலம்

சிறுபிள்ளைகள் சேறு மிதித்து, திரியும் கூடத்திலே பாலையும் நீரையும் பிரித்து அறிதலை உணரவல்ல அன்னம், சங்கினம் என்னும் சங்கினைத் தன் பெடை எனத் தழுவ, அது பெடை அல்லாமை கண்டு மனம் குழம்பித் திரும்பிப் போகும். அப்படித் திரும்பும் அதன் நோக்கத்தைத் தீமையில்லாப் பண்புடைய சீவகனும், தோழர்களும் உணர்ந்து நெய்தல் ஒழுக்கம் உள்ள நிலத்தைக் கடந்து சென்றனர்.

### முல்லை நிலம்.

உயர்ந்த கொன்றை மரங்களின் அழகிய நிழலில், திரண்ட திரையுடைய மணி விளக்கு ஒளி செய்யும், கொம்பினை உடைய ஆண் மானும், பெண் மானும் துயில, செம்புள்ளிகளையுடைய வண்டுகள் கொன்றை மரங்களின் அருகே, மகளிரது அழகு முகத்தின் எழிலைப் பருகும் ஆடவரைப் போல மலர்த்தேனைப் பருகுவதற்குக் காரணமான முல்லை மலர்கள் நிறைந்த முல்லை நிலத்தை,

" மொட்டறா முல்லை மொய்ம்மலர்க் கானம்
முருகுவந் தெதிர்கொள நடந்தார்"

என முல்லை நிலம் கடந்தது கூறப்படுகிறது.

### குறிஞ்சி நிலம்

குளிர்ந்த கங்கை நீரை, சடையில் ஒளித்து ஏற்கும் திற- விளங்கும் திங்களைத் தாங்கிய சிவபெருமானைப் போல, அருவி நீ- தன் தந்தத்திலே வீழ, மூங்கில் வளரும் குன்றிலே, யானை நின்று நீரா-

மணம் மிக்க நல்ல சந்தனமரங்கள் நிறைந்த மலைச்சாரலில், அணிகள் அணிந்த மென்மையான தோற்றம் கொண்ட பெண்களைப் போல, குறிஞ்சி நிலத்தைக் கடந்ததை,

" அருவி நீர் மருப்பினின் வழியக்
கிளைவளர் குன்றிற் களிறுநின் றாடும்
கிற நறுஞ் சந்தனச் சாரல் "

பாலை நிலம்.

நிலையில்லாத இவ்வுலகில் நிலையான மிக்க புகழை விரும்பியவன் செல்வம் குறைந்து செல்வது போலவும், பரத்தையர் மீது கொண்ட காமம் குறைந்து விலகுவது போலவும், முனிவர்களின் சினம் கணத்தில் தோன்றி மறைவது போலவும் கேடில்லாதாகிய சீவகன் முதலியோர் ஒரு பகல் பொழுதுக்குள் வெம்மை மிகும் கொடிய பாலையைக் கடந்து சென்றனர்.

விதேக நாட்டை அடைதல்

செறிந்த இலைகளையுடைய மாச்சோலைகளையும், வாழைப்பழத்தையும் நண்டனம் கொறித்து மகிழும் சோலையில், வழியில் கிடந்த நத்தை, ஆமைகளை மிதித்து மலர்கள் சூழ்ந்த நீர்ப்பொய்கைக்கிடையே தோட்டங்கள் சூழ்ந்த விதேக நாட்டை அடைந்தனர்.

மக்கள் வரவேற்றல்.

நாட்டில் விளைந்த பொருள்களையும், கடலில் இருந்து கிடைத்த பொருள்களையும், நல்ல மலையில் கிடைத்த பொருள்களையும், காட்டில் கிடைத்த பொருள்களையும் கொண்டு அரசன் விருப்பப்படி அங்கிருந்த முல்லை நிலத்தே சீவகன் முதலானவரை எதிர்கொண்டு வரவேற்றனர்.

## மகளிரின் நிலை

பேரழகு மங்கையரின் அழகிய நெற்றியில் அணிந்த ஒளிவிடும் நெற்றிப்பட்டம் ஒளி வீசியது. வாசனைப் பொடியையும், நெற்றிச் சுட்டியையும் புனைந்து, சரிந்து வீழும் கூழையொடு சிலம்புகள் ஒலிக்க சீவகனைக் காண வேண்டி விருப்புடன் அழகுமகளிர் வருகைப் புரிந்தனர். அழகிய அணிகள் அணிந்த மகளிரின் அகன்ற கண்கள் சீவகனைக் காணாது அழவுமே தன்மையுடையது. ஆடல், பாடலும் நீத்திருந்தனர். மாலை சூடிய கூந்தலோடு சீவகனைக் காணாது தெருவிலும், மாடங்களிலும் நெருங்கி நின்றனர். சுண்ணப் பொடியைத் தூவி சீவகனை வாழ்த்தி வரவேற்கக் காத்திருந்தனர். அணிகலன்களை அணிந்த மகளிர் காதுக்குழை, அழகிய கயல்மீன் போன்ற கண்ணும் உடையவர்கள் மின்னல்கூட்டம் போல் மயங்கி நின்றனர்.

## சீவன் மாமன் கோவிந்தனுடன் அமர்தல்

ஒளிமிக்க மணிகள் பதித்த அடைப்பை, செம்பொன்னால் ஆன ஒளிவாள், நீலமணி கொண்டு வாய்மூடு கலசப்பானை, கவரி ஆகியவற்றினோடு இளமங்கையர் உயர்ந்த தவிசின் அருகே வைத்துவிட்டுச் செல்ல, சீவகன் மாமனுடன் ஆராய்தற்பொருட்டு அமைச்சர்களுடன் கட்டிலில் ஏறி அமர்ந்தான்.

## கட்டியங்காரன் ஓலையை வாசிக்குமாறு கோவிந்தன் கூறுதல்

கட்டியங்காரன் ஓலையில், சச்சந்தனை நான் கொன்றேன் என்னும் பொய்ப்பழி இவ்வுலகில் உள்ளோர் அறிவை மறைத்து என் மேல் படர்ந்திருக்கும் பொய்யை உண்மை என நீ நம்பியிருக்கிறாய். என் நெஞ்சைப் பிளந்து காட்டினாலும் நம்பக்கூடியவர் யாரும் இல்லை. கோவிந்தனாகிய உனக்கு நான் உயிரையும் தருவேன். என் சொல்லை நம்பி, தாமதியாமல் விரைவாக வருக என எழுதியிருந்தான்.

## முரசறைந்து போர் வீரர்களை அழைத்தல்

"வீரர்களே, நீங்கள் பகைவரது உடலைப் பிளந்து சினந்து சீறும் யானையும், தேரும், குதிரையும் ஆகியவற்றை அலங்கரித்து - வீரக்கழல் அணிந்து வாளை வலக்கையில் ஏந்தி, கடவுள் நாணுமாறு நாளைக்கு நம் அழகிய நகரினை திரண்டு வருக" என்று முரசு அறையப்பட்டது.

## யானைப் படையின் இயல்பு

யானைகள், அரிய பெரிய துதிக்கை, கால்கள், வாய், வால், தந்தம் ஆகிய ஐந்தினாலும் கொல்வன. கரிய வேலினை தோன்றிய சிறுகையும், பசுவின் பாலையும் தின் வெண்மையான கொருத்த கால் நகங்களையுடையன. தீப்பொறி பறக்கும் அஞ்சாத கண்களையுடைய சிறப்பின. பத்தாயிரத்து அறுநூறு யானைகள் படையில் இருந்தன.

## யானை மறவர் இயல்பு

எரியும் வெறுத்திக்கும் அஞ்சாத யானைகளின் மேல் ஏறி எறிகோல் எறிதல், வாள் ஏந்திப் போரிடல், வில்லை வளைத்து அம்பு செலுத்துதல் ஆகிய மூன்றிலும் சிறந்த பயிற்சியுடையவர். கீற்றுவனோரும் போர் செய்ய வல்லவர். வாள் வழியாக போரிட திறனுடையவர்.

## குதிரைப் படையின் இயல்பு.

ஆடும் குதிரைகள் பன்னீராயிரம். சேணம் பூட்டிய குதிரைகள் அறுபதினாயிரம். பொன்னாலான வீசும் குமிழியுடைய கவரியை நெற்றியிலணிந்த குதிரைகள் அறுபதினாயிரம்.

## குதிரை மறவர் இயல்பு.

எரியீட்டியும், வாளும் விடமுடைய பாம்பின் தோற்றம் போன்ற படைக்கலன்களும் முழுப்பயிற்சி பெற்ற

## கௌராட படையின் இயல்பு.

கௌராட படையினர் மாலையும் கண்ணியும் அணிந்த முடியினர். முழங்கும் வீரக்கழல் செறிந்த காலினர். வாளின் பிடியை விடாமல் பிடித்த கையினர். கவசம் அணிந்த உடலினர். யார்க்கும் எதற்கும் அஞ்சாத இயல்பினர்.

## போர்ச்செய்திகள்

நெருங்கிய யானைகள் கடலில் செல்லும் மரக்கலமாக, மோதும் அலைகள் குதிரைகளாக, ஒளி விளங்கும் வாட்படை கொல்லும் திறமுடைய சுறாமீனாக சினந்ததொரு இரண்டு கடல்கள் போர் செய்ய எதிர்ந்ததொரு காலமுண்டாயின், அதனை ஒத்தது இப்போர்க்களம். கொடிய வீரக்கழலையுடைய வீரர் பெரிய வில்லிடத்தே அம்பைத் தொடுத்து, அதனை மழைபோலச் சொரிந்தனர். அதனால் வானம் மறைந்தது. வீரர்கள் கூற்றுவனைப் போலச் சினந்தனர். வீரர்களின் ஒப்பற்ற கரிய தலைகள் பனம்பழங்களையுடைய பனங்காடு காற்றடித்தால் விழும் பழங்களை போல் உதிர்ந்தது. மன்னர் ஏறிய யானைகளின் தந்தங்களோடு தந்தங்கள் உராய்ந்து தீப்பொறி பறக்க மோதிப் போரிட்டன. சில யானைகள் சினம் மிகுந்து கொடிகட்டிய அழகிய தேர் பொறையாகுமாறு அதை முறித்து வட்டமான அத்தேருருளையைச் சுமந்து எழுந்து, ஞாயிறு சேர்ந்த மலை போல நின்றன. காமுகன், கோமுகன், மதனன், மன்மதன், விபுலன், பதுமுகன், போன்றோரும் போரில் ஈடுபட்டனர். பூரணசேனனும் போரில் திளைப்பட்டான்.

## பூரணசேனன், சிங்கநாதன்

பூரணசேனன் போர்த்தகுதியுடைய சிங்கநாதனைக் கண்டு என்னுடைய சினம் மிக்க வேலின் வயிறு நிறையும் என்று கூறி

ஆரவாரம் செய்தான். போரில் சிங்கநாதன் தொடர்ந்து எய்த அம்புகள் நெருங்கிச் சென்று, உடம்பில் புகுந்ததனால் கூரிய பற்களையுடைய அம்புப் படுக்கையிலே கிடந்த பூரணசேனன், பொன்னொளி வீசும் கழற்காலையும் நீத்தான்.

சீவகன் குதிரையின் ஏறுதல்

ஒளிவிடும் மணிக்குவியல் போல இருள் நீங்க விளங்கும் மேனியையும், அழகிய மணிகள் பதித்த பொன்னணி அணிந்த மார்பினையும் உடைய சீவகன், கையில் வில்லை ஏந்தி எல்லோரையும் வணங்கச் செய்து, விண்ணுலுள்ள தேவர் தொழ குதிரை பூட்டிய தேரிலே ஏறினான்.

சீவகன் போர் செய்தல்

சூறாவளியின் முழக்கமும், மேகத்தின் முழக்கமும், கடலின் முழக்கமும் சேர்த்து பெருவலி படைத்த சிங்கத்தின் முழக்கத்தோடு ஒன்று கூடியது போல, போர்க்களத்தில் போர் செய்யத் தொடங்கினான். சீவகன் வில் வளைந்து சிவப்பு நிறம் ஏத்த கண்ணைப் போல இருந்தது. பகைவர் மனம் கலங்கினர். சீவகனுடைய படையில் உள்ள யானைகள் மத்தகத்திலே அணிந்திருந்த சங்கிலிகள் அசைய மண்மேல் விழுந்து அழிய, குதிரைக் கூட்டம் நிலத்தில் வீழ்ந்து புரள, தேர்கள் முறிய, சிங்கம் போலச் சினந்து போர் நடந்தது. நீண்ட குகைகளிலே ஆண் சிங்கங்கள் இறந்து கிடந்தன போல, கட்டியங்காரனின் மைந்தர் தேரிலே மாண்டு கிடந்தனர். வில் பொருந்திய தோள் உடைய சீவகன் தீப்போலச் சினந்தான்.

கட்டியங்காரன், சீவகன் உரையாடக் கொள்ளுதல்

கட்டியங்காரன், சீவகன் போரிடுதலைக் கண்டு, விளக்கிலே நெய் வறண்டவுடன் அழகிய விளக்கு திரி தீய்ந்து

அணைந்து போகுமேயன்றிச் சுடர் விளக்கு எரியுமோ? அதுபோல பெரிய நம்பியினை இழந்தால், செல்வம் கெடாதபடி அதைப் பிடித்து நிறுத்தி வைப்பவர் எவருமில்லை. ஆதலின், இது நின் செயல் அன்று காண்!" என்றான்.

இதனைக் கேட்ட சீவகன், "தன் பவள வாய் திறந்து முத்தொளி வீச நகைத்து, நீ எனக்கு அஞ்சினாய்! என்றான். அதற்கு அவன் வெற்றி என்பது விதியினால் வருவதாகும். வீரனே! நின் கைவேல் என்னை நோக்கி வரும் போது, நான் கண் இமைத்தால், அப்போது வேண்டுமானால், நீ மேற்சொன்னது போல் சொல்லி நகைப்பாயாக" என்றான்.

## கட்டியங்காரன் போரில் வீழ்தல்

போர்க்களமான கட்டியங்காரனின் மார்பினை, ஞாயிறு போன்ற சீவகனின் கூர்மை வாய்ந்த அழகான அம்புகள் பாய்ந்தன. அதனால், கட்டியங்காரன் உயிர் பிரிந்தது. அப்பொழுதே, சினத்தீ பறக்க விழித்து நோக்கி, கண்டோர் அச்சமுற வானிலிருந்து திங்கள் வீழ்வதைப் போலக் கீழே விழுந்தான்.

## சீவகன் சிறப்பு.

ஆழிசூழ் உலகமெல்லாம் கண்டு அஞ்சுமாறு, ஒளி விளங்கும் சூரியனை 'கவ்' என ஒலிக்கும் அலைகடல் மேல் -கேது என்னும் பாம்பு விழுங்கிய பின், பல நாட்கள் கழித்து, பல மணிகளையுடைய அந்நாகத்தின் வாயை விரைவாகப் பிளந்து வந்து, ஆர் இளஞாயிறு நின்ற தன்மையை ஒத்து, மண்மகளின் அழகைப் பொருந்தி நுகர்ந்தான்.

———.

அலகு - 4

## திருவடி தொழுத படலம் -

முனைவர். இ. மல்லிகாதேவி

அநுமன் இராமபிரானது திருவடியைத் தொழுது சீதையை தான் கண்டு வந்த செய்தியைக் கூறுவது.

அநுமன் ஆகாய வழியாக வானரர்பால் சென்றான். வானர வீரர்கள் அநுமனது வரவை ஆவலோடு எதிர்பார்த்து வந்தனர் வீரர்கள் தாய் பறவையின் வருகை கண்டு மகிழும் பறவைக் குஞ்சுகளின் மகிழ்ச்சியைப் போன்றது.

அநுமனைக் கண்ட அவ்வானர வீரர்கள் மகிழ்ச்சியால் சிலர் அழுதனர், சிலர் அவனை ஆரவாரித்தனர், சிலர் குதித்து ஆடினர், சிலர் குதித்து சுற்றினர், சிலர் பாடிப்பேசி போல் பார்த்தனர். பல்வானர வீரர்கள் ~~அவர்களும்~~ அநுமனைத் தழுவி உபசரித்தனர்.

அநுமன் உடலில் உள்ள புண்களில் அமைந்துள்ள அழுப்பரைத் வானர வீரர்கள் துடைத்தனர். அங்கதன் கிழவர்களும் பணிந்தவர்களும் ஆயினர். முதலில் அங்கதனுக்கு வணக்கம் தெரிவித்துப் பின் சாம்பவான், பாலமகேந்திரன், ஆகியோருக்கு வணக்கம் செய்தான்.

### அநுமன் நடந்த செய்தியை கூறுதல்

நீ இப்பொழுது போய்த் தேவாக்கள் பொருளுக்கு தேடி வந்து சேர்ந்தது பெரிதாக நடந்ததை சொல்வாயாக என்று வீரர்கள் கேட்டுக்கொள்ள வாயு தேவனின் மகன் அநுமன் தாம் புகழ்ச்சி செய்தல் மேன்மைக்கு இழுக்காம் ஆதலால், அரக்கரோடு நிகழ்ந்த போர்ச் செய்தியையும் இலங்கையை எரித்ததையும் சொல்லவில்லை.

பின் அனைவரும் இராமபிரானைக் காண விரைந்தனர். சீதையை தேடிய ஒருமாதத் தவணை கழிந்துவிட்ட நாள் கடந்தமையால் தலைவன் அரசன் சுக்கிரீவனை தண்டிப்பானோ என்பதால் அநுமனை இராமபிரானிடம் விரைவாகச் செல்ல வேண்டிய காரணத்தினை வானர வீரர்கள் கூறினர்.

### சுக்கிரீவன் தேற்ற இராமன் தேறுதல்

சீதையின் பிரிவுத் துயரம் வாட்டுதலினால், தேம்பித் துயர் கொண்ட இராமபிரானை சுக்கிரீவன் தமது நல்ல

மேருவானது அதிர்ந்தது போல் எனத் திரிவிக்ரமனுக்குக் காட்சியளித்
தெரிந்தது. காலையில் உதித்தெழுந்த திரிபுவனம் விளங்கி தோன்றி
தோற்றமளித்தவன் திரிவிக்ரம மேருவானத்துக்கு வந்ததனால்
அங்கதன் அருகில் வந்தான். திரிவிக்ரமன் அங்கதனை நோக்கி

கிந்திரன் வானம் கீழ்ந்த உன்சமைய மேருவின் காவணம்
அந்தரம் தவழ்க்கு நோக்கு கரியவன் ஆனான

(கம்ப. 1272 பாடல்)

இந்த காலத்தில் தேவேந்திரன் தன் மேனியை வளர்க்கத் தொடங்கி
விண்ணளவு மேருவை உடைய கிரிவலம் செய்தருக்கும், அப்பொழுது
ஒவ்வொருவருக்கும் உரிய வகைகள் அதிர்ந்தன அந்தரம் உள்
வரைந்த விண்ணொருவருக்கு நான் தெரிந்த திரிவிக்ரமன் அங்கதன்
உணர்வுடையவனாக.

அங்கதன் சொன்னவாறு திரிவிக்ரமன் சொன்னவை செய்தான்
உலகையும் உன் மேலேறு காலங்கள் கிடந்து சுழன்று நின்ற
ஒருவன் சுக்ரீவனிடம் ஒப்புவித்தான் என்ப. வானர
மேருவானதில் கிளிர்த்தல்

இராமன் தேடிய வந்தவனை அழைப்பித்த சுக்ரீவன்
காட்டினான் தேடுதல் செய்ய ஒப்புக்கொண்டான்.
ஒத்தாசையாக வந்தவன் திருமேனிய இராமன்
தேடுதற்கு உடையவன் மெய்ஞானிய அனுமன் போல நின்று
தேடினான். நான்கு திசைகளிலும் அனுப்பிய வீரர்கள்
சுக்ரீவன் தெரிந்து ஒப்படைத்தான்.
கிட்கிந்தை காண்பதற்கு நாட்டப்பட்டவர்கள் வாயிலாக
இராமனாக வந்து சேர்ந்து ஒப்புவித்து நின்றனர்.
அதன் பின் புலம்பிப் போன தெய்வ இராமன் நாடு
ஒன்றுக்கு ஒப்படைக்கும் சுக்ரீவன்

சொற்களால் தெளிவாக்கினான். தென்திசைத் தவிர மற்றைய மூன்று திசைகளுக்கும் சென்றவர்கள் பிராட்டியை காணாதவர்களாக வந்தனர். என்ற செய்தி கேட்டதும் இராமன் உயிர் உள்ளவரையில் அனுமன் பிராட்டியை கண்டு வருவான் என்ற நம்பிக்கையால் 'உயிர் உடன்' இருந்தான்.

சுக்ரீவனை நோக்கி இராமன் துயரோடு பேசுதல்

இந்த காலத்துக்குள் தென் திசை சென்றவர்கள் வராததால் மாண்டொழிந்தனரோ என்று அயர்கின்றான் இராமன். இந்த காலம் கடந்ததால் மீண்டும் இராமன் இருக்கும் கிட்கிந்தைக்கு வர அஞ்சி வானர வீரர்கள் வடக்கிருத்தலை மேற்கொண்டனரோ என்பதும் இராமனின் உள்ளத்தில் எழுந்தவையாம்.

அனுமன் இராமனுக்கு சீதையின் நிலையை குறிப்பால் உணர்த்துதல்

சீதாபிராட்டி கற்புத் திண்மையுடன் இலங்கையில் இருக்கிறாள் என்ற உண்மையை இராமபிரான் முதலில் அறிந்து கொள்ள அனுமன் தென்திசை நோக்கி வணங்கி வாழ்த்தினான்.

அனுமன் தான் பிராட்டியைக் கண்டதையும் அவள் கற்பின் சிறப்பையும் பிராட்டி இருக்கும் இடத்தையும் இராமபிரானுக்கு கூறினான்.

தேவமகள் தானே என்ற அளவில் தம் கணவனுக்கும், மாமனுக்கும் தந்தையருக்கும் சிறப்பு அளிக்கும் நிலையில் நடந்துகொண்டிருக்கிறாள். சீதையின் பெருமையை அனுமன் உணர்த்தினான்.

பெண்குலத்திற்குரிய சிறந்த குணங்கள், அன்பு, பொறுமை, கற்பு ஒழுக்கம் பிராட்டியிடம் பெருமைப்பெற்றன. சீதையாள் மேன்மை, மெய் என்ற குணங்களால் இராமபிரானைப் பிரிந்து இருக்கிறாள். இராவணனால் தொடப்படாத கற்புடையவளாக இருக்கிறாள்.

தவம் செய்த தவம் ஆம் தையல் - என்பது பிராட்டியின் கற்பின் சிறப்பை உணர்த்துகின்றது.

பின் அசோக வனத்தில் இருந்த சீதை உரைத்தது போல.

'என்பால் தேவதே அச்சம் நீக்க
இராமன் என்ற இந்த நாமனை ஏந்திய வருவாய்
நம்பி'

(க.ரா. 6042)

தேவதை அச்சத்தை நீக்கியமையால் அரக்கியர் சொல்லைக் கேளாமல் அவரிடம் இரக்கமே காட்டினாள் பிராட்டி. என அறமும் காட்டித் தந்தான் அனுமன்.

மேலும் பிராட்டிக்கு உயர்ந்தது எதுவும் இல்லாதது என்பதை அந்த உரை வந்த மேனியும் ஐயனை கிடைத்ததால் கண்ணீர்க்கொண்டு அதனை நோக்கி ஐயனைப் பற்றினாள்.

பிராட்டியிடமிருந்து பெற்று வந்த சூடாமணியை அனுமன் இராமனிடம் கொடுத்தான். அதைப் பெற்றுக் கொண்ட இராமனை அனுமன் எப்படி வேகமாய் உயிர்த காப்பாற்ற வர முடியும்? இப்படியே அநுமானித்து அவன் விரைந்து செய்த இச்செய்தியும் என்றும் நிற்கும், என உரைத்தான்.

சூடாமணியை இராமபிரான் தன் கையால் தொட்டவுடன் தன் திருமணத்தில் பிராட்டியின் கையைப் பற்றிய போன்றிருந்தது. அம்மகிழ்ச்சியினால் மெய்சிலிர்ப்பும் கொண்டிருந்தது.

இராமபிரானுக்கு கண்ணீர் வழிந்து பெருகின. மெய்யும் தோளும் பூரித்திருந்தன. அதனை உயர்ந்தவரின் தோள்கள் உண்டாயின. அப்போது இராமபிரான் அடைந்த நிலையை இராமர்து அறிவார் யாரோ உள்ளார்? அதற்கு இல்லை என்பதாம்.

ஆயினும் மேன் சுக்ரீவன் இராமனை நோக்கி ஐயனே! கேட்கின்றோம் பிராட்டியை நாம் நேரிடம் அழைத்துக் கொண்டு "காலம் தாழ்த்தாது இன்றே இலங்கை நோக்கிப் போவோம்" என்றனன். உடனே சுக்ரீவன் வானரர் படைக்கு கட்டளையிட்டவனானான்.

எழுக, நலம் பலகொள்! என்றான்; 'ஐ' என்றல்
அனைத்தும் எழுந்தே
ஒரு சேனை ஏற்றி கொண்டு வந்தது ஒருங்கு, தொழுதி
வணங்கிநின்ற அன்றே!
(க. கிட். 6056)

தொகுப்பு சேனைகள் எல்லாம் 'ஐ' என்று தத்தம் காவலர்களுடன் புறப்படுமாறு சுக்கிரீவன் கட்டளையிட்டான். தெய்வீக உடைய ஒரு அரசோ, சேனைகள் உன்னை எல்லாம் பிடித்திருக்கும் பெரிய ஒருவனை அழித்து எழுந்து பாய்ந்து கடல் அலைகளைப் போல எழுந்து எழுச்சியுடன் சென்று நிறைந்தன.

இராமன் புறப்பட்ட பொழுதிலும் எல்லோரும், கிட்ட இருந்தவை உடைய அரசன் நிகழ்ந்த என்றும் சேனையான் பெரும் திரளையான வழக்கின் தெய்வீகமும் கரிய நிறமும் உடைய அரக்கர்கள் என்று சொல்லப்படும் கொடியவர்கள் செய்யும் பெருந்துன்பம் நீங்க காவல் செய்யும் திருவின் நிறைப்பு கோட்டை போல அரண்களும் அமைவுள பகைவர்கள் எல்லாம் அழிந்திடும் வகையில் செல்வம் கண்டு மகிழ்ந்தனர்.

அன்புவழி நின்று தொண்டுசெய்யும் சேனை வானரப்படை வீரர் திரண்டெழுந்த காட்சி அமைந்தது.

# அலகு-4. திருமுருகாற்றுப்படை

(1) திருமுருகாற்றுப்படை எந்த நூலில் உள்ளது?
பத்துப்பாட்டு.

(2) [illegible] எத்தனை நூல்கள் உள்ளன?
[illegible]

(3) பத்துப்பாட்டில் எத்தனை பாடல்கள் உள்ளன?
15.

(4) பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை எத்தனையாவது பாடல்?

(5) 15.

(6) திருமுருகாற்றுப்படை என்பது யாது?
[illegible]

(7) அவன் எந்த மலையில் [illegible]?
[illegible]

(8) அவன் எந்த மலையில் இருந்தான்?
மகேந்திரகிரிமலை

(9) ஆறுமுகன் பெயர் யார்?
முருகன்

(10) அவன் தோற்றம் [illegible]?
[illegible]

(11). ஆறு சேனைக்கு தலைவன் யார்?
முருகன்.

(12) [illegible]
தேவேந்திரன் யானை [illegible].

(13) தேவேந்திரன் யானையின் பெயர் என்ன?
[illegible].

(14) சீதையைக் கொண்டுபோனவன் நாமம் யார்?
இராவணன்.

(15). வாயுவின் மகன் யார்?
அநுமன்

(16) இராமனின் ஏவலன் என அழைக்கப்படுபவர் யார்?
அநுமன்

(17) பெருமையுடைய அடுத்தவர் யார்?
பாலகாண்டம்

(18). இராவணனின் அரண்மனையில் சீதையை அழைத்துப் போனது யார்?
பெருமைக் கொண்டவன் பாலகாண்டம் அடுத்தது.

(19). சூரியனின் மகன் யார்?
சுக்கிரீவன்

(20) சீதையை அநுமன் மோதிரம் கொடுத்து எதைச் செய்தான்?
மோதிரம்.

(21) அநுமனிடம் சீதை கொடுத்த பொருள் என்ன?
சூடாமணி

(22). சீதைக்கு உதவிய அரக்கியின் பெயர் யாது?
திரிசடை.

(23). வாலியின் தம்பி உறவினர் யார்?
சுக்கிரீவன்

(24) இராவணன் யாரைக் கொண்டுபோனான்?
அசோகவனம்.

(25) இராவணன் கொண்ட அநுமன் தூதன் என்னென்ன செய்தியாது?
கொட்டைப்பொன்

# பெரிய புராணம் - சேக்கிழார்

பெரிய புராணத்தை அளித்துத்தந்த சேக்கிழாரும் தமிழகத்தில் வாழ்ந்த சிவத்தொண்டு செய்த சிவனடியார்களைத் தம் காப்பிய மாந்தர்களாகக் கொண்டுள்ளார்.

சேக்கிழார் பெருமை

பன்னிரு திருமுறைகளில் பன்னிரண்டாவதாகப் போற்றப்படுகின்றது பெரியபுராணம். இரண்டாம் குலோத்துங்கன் பெரியபுராண நூலை யானையின் மீது வைத்து நகர் வலம் வரச்செய்து சிறப்பித்தானாம். உமாபதி சிவாச்சாரியார் சேக்கிழார் புராணம் பாடியுள்ளார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சேக்கிழாரின் பெருமையைப் போற்றிச் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ எனப் பாராட்டுகின்றார். ஜி.யு.போப் ஒவ்வொரு தமிழ் மாணவனும் பெரிய புராணத்தைப் படிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றார்.

பெரியபுராணம் சிவபக்த விலாசம், உபமன்யு விலாசம் என வடமொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கண்ணப்ப நாயனார்:

பிறப்பும் வளர்ப்பும்: பொத்தப்பி நாட்டிலுள்ள உடுப்பூர் என்ற ஊரில் வேடர் தலைவனான நாகன் என்பவனுக்கும் தத்தை என்பவளுக்கும் நீண்ட காலமாக குழந்தையில்லை. குழந்தை வேண்டி முருகனை வழிபட்டனர். பிறகு குழந்தை பிறந்தது. இக்குழந்தை எடுக்க முடியாத திண்மையாய் இருந்ததைக் கண்டு திண்ணன் என்று பெயரிட்டனர். வில் வித்தை வில்லாசிரியனைக் கொண்டு திண்ணப்பனை வில் பழக்கச் செய்தான். வில் பயிற்சியிலும் பிற படைக்கலப் பயிற்சியிலும் திண்ணனார் முன்னேற்றம் அடைந்தார். திண்ணனும் காளையர் சிங்கம் போல் பதினாறு ஆண்டு நிரம்பிய அளவிலேயே நாகன் தன் முதுமையின் காரணமாக திண்ணனாரை அழைத்து 'இன்று முதல் நீ தான் நம் கூட்டத்திற்கு தலைவன். என்னை விட நீ நம்மரபின் மேன்மை காப்பாற்ற வேண்டும். என்று ஆசி கூறி உடையாக அம்பும் உடைவாளையும் கொடுத்தான். பின் திண்ணனார் தோலையும் வில்லேந்திய மேகம் போல வேடர் சூழ வேட்டைக்குப் புறப்பட்டார். அப்போது காட்டுப்பன்றியொன்று இடி போன்ற உறுமலுடன் வலைகளை அறுத்துக் கொண்டு ஓடியது. அதைப் பின்தொடர்ந்தார் திண்ணனார். இவரை பின்தொடர்ந்து நாணன் காடன் என்னும் வேடர்களும் பின்தொடர்ந்தனர். இவர்களை நெடுந்தூரம் ஓட்டி ஓடி. இறுதியில் அருவாரப் புதரில் சோர்ந்து நிற்பதைக் கண்ட திண்ணனார். அப்பன்றியை நெருங்கிச் சென்று அதனை உடைவாள் குத்திக் கொன்றார். பின் தொடர்ந்த வேடர்களும் பாராட்டி மகிழ்ந்தனர்.

காளத்தி மலை - குடுமித்தேவர் - பாரம் தீர்கிறதே

நாணனும் காடனும் களைத்ததன் காரணத்தினால் பசியும்
வந்தது. இந்த பன்றியை நெருப்பில் காய்ச்சித் தின்று தீர்ப்போம்
குளித்துச் செல்வோம். என்று கேட்டுக் கொண்டனர். அவரும் இணங்கினார்.
பொன்முகலி என்கிற ஆறு ஓடுகிறது அங்கே செல்வோம் என்று
மூவரும் சென்றனர். அந்த தொலைவிலே சிவன் எழுந்த
இருக்கும் திருக்காளத்தி மலையைக் கண்டனர் திண்ணனார்
நாணா அக்குன்றுக்குச் செல்வோமா? என்றார். பார்ப்போம் வா
நல்ல காட்சி! இந்த மலையிலே குடுமித்தேவர் இருப்பார் - இம்மலையில்
என்று நாணனுடன் சென்றார். தத்துவப்படிகளைக் கடந்தார்.
திருக்காளத்தி மலையார் கொழுந்தாயுள்ள தனி முதல்வரைக் கண்டார்.
உற்சாகம் அடைந்தார். இந்த பச்சிலையும் பூவும் இட்டு நீரும்
வார்த்து இப்படிச் செய்தவர் யாரோ? என்று நாணனைக் கேட்டார்.
நாணன் கூறுகிறான் பார்ப்பான் இவ்வாறு செய்வதாகக் கூறினார்.
அன்புடன் இதைச் செய்வதை இறைவர் இனிய விருப்பம் போலும்
என்றெண்ணினார் திண்ணனார். எப்பொழுதும் இறைவனை விட்டு
மனம் இல்லாமல் தங்கினார். திண்ணர் வில்லை ஏந்தி
கொண்டு தொடர்ந்து கட்டுப்பட்டார். தெய்வ மயக்கம் திருப்பசி
தனைக் கேட்டது. இதைக் கண்ட காடன் நாணன் தன் இருப்பிடம்
நோக்கி சென்றனர். திண்ணனார் தொன்னையிலே ஊனை
நிரப்பிக் கொண்டார். நீராட்ட வேண்டிய வாயாலே பொன்முகலி
நீரை மொண்டு கொண்டார். மலர்களை தலையில் ஏற்றிக் கொண்டார்
ஒரு கையில் வில் ஏந்திக் கொண்டு எம் இறைவர் மிகப் பசித்திருப்பார்
என்ற பரிவுடனும் ஏக்கத்துடனும் திருக்காளத்தியப்பரை அடைந்தார்.
நீராட்டல் - மலரிடல் - திருவமுதூட்டல் - காவல் - சிவனார்
குடுமேல் இருக்கும் மலரைச் செருப்பணிந்த காலால் மாற்றினார்
வாயாலுமிழ்ந்த நீரை - அன்பை - உமிழ்ந்தார். மலரை இறைவர் முடிமேல்
வைத்தார் தொன்னையில் உள்ள ஊனை எதிரே வைத்தார்
இரவிலே விலங்குகள் வருமென்று கையில் வில்லுடன் தூங்காது
காளத்தியப்பர் அருகிலே வில்லோடு நின்றார்
இவ்வாறு வேடர் வழிபாடு நடைபெற்றது.
அந்தணர் வழிபாடு: சிவகோசரியார் ஆகம முறைப்படி
வழிபட மலைக்கு நீரும் நறுமணப் பூக்களும் பொருளும் கொண்டு வந்தார்
இறைவனிடம் உள்ள ஊனைக் கண்டு அலறி அழுதார்.
இந்த இழிசெயலைச் செய்தவர் யாவரோ. ஐயோ கெட்டேன்.
என்று சத்தம் செய்து தமிழ் மறை மொழியாலே வாழ்த்தினார்.
வேடர் வழிபாடு - அந்தணர் வழிபாடு மாறி மாறி நடைபெற்றது.
அந்தணர் கனவு: ஐந்து நாட்கள் கடந்தது. ஆறாவது நாள்
வழிபட வந்த அந்தணர் கனவில் தோன்றினார் இறைவன்.
கூறுகிறார்: அவன் செயலை நாளைக்கு உனக்குக் காட்டுவோம்
ஒளிந்திருந்து காண்பாயாக. என்றவுடன் அவ்வாறே செய்தார்.
அன்பன் காட்சி - கண்ணப்பர்: சிவனுடையாருக்கு என்ன சோதனையோ
ஐயோ என்று அழுதார். தொலைவில் அழுவதும் போதே
காளத்தியப்பரைப் பார்த்து நோக்கினார். வேடர் தம்மை
தெய்வத்தின் காட்ட விருப்பு கொண்டவர், தம்
திருவிழிகளிலொன்றிலே - வலக்கண்ணிலே - செந்நீர் கொட்டுவதை
அந்தோ (கெட்டேன்! என்றே) அழுதார். உண்மையாகவே
உதிரம் வழிந்தது. கண்டவுடன் மயங்கினார். வாயாலூதி
கண்ணீர் சிந்தியது. மலர்கள் சோர்ந்தன. செயல் மறந்து அயர்ந்தார்.

குடுமியப்பனைக் கட்டிக் கொண்டு கோவென்றலறினார்.
என் செய்தால் இந்த நோய் தீரும்? இதைச் செய்தவரையும்
காணேனே. அம்பு பாய்ச்சின அடையாளமும் பச்சிலைகளைக் கொண்டுவந்தே.
பச்சிலைகளைப் பிழிந்து பூசினார். ஆறவில்லை அவ்வளவாகப் பெருகியது.
குருதி வழிந்துகொண்டேயிருந்தது! என் செய்வேன் என்று ஏங்கினார்.
அப்போது திண்ணனாருக்கு 'ஊனுக்கு ஊன் இடல் வேண்டும்' என்னும்
பழமொழி தோன்றியது. என் கண்களைப் பெயர்த்து அப்புவேன்.
நின்றாலும் நிற்கும். என்று கண் ஒன்றை அம்பால் தோண்டினார்.
ஈ. என்னே அன்பின் பெருமை! குருதி நின்றது கண்டார். பின்,
இடக்கண்ணிலும் இரத்தம் வரச்செய்தார். இடக்கண்ணையும்
பெயர்த்துவிட்டால் இறைவர் கண் இருக்குமிடம் தெரியாதென்று
நினைத்துத் தம் இடக்காலை இறைவர் கண்ணருகே ஊன்றிக்கொண்டு
அம்பை எடுத்தார். அன்பின் வலிமையாலே தம்
அம்பை அப்பதற்கும் அவர்
இடக்கண்ணைத் தோண்டினார். அன்பர் வள்ளலார் — செங்கண் வெள்ளேற்றார் —
உண்டனரோ. அருள் வள்ளலார் அம்பு தொட்ட கையைத் தடுத்துப்
தம் திருக்கை நீட்டி அம்பு தொட்ட கையைத் தடுத்துப்
பற்றிக்கொண்டார். அப்பெருமானார் திருவாய்மலர்ந்து
நிற்க! கண்ணப்ப! நிற்க! அன்புடையோய்! நிற்க என்றார்.
இவற்றை அந்தணர் கண்டார். வானவர்கள் கண்டனர்.
மலர்மாரி பெய்தனர். இறைவனின் இடக்கண்ணில்
இரத்தம் நின்றது. கண்ணப்பரின் வலக்கண்ணும் பொருந்தியது.
கண்ணப்பரின் கையைப் பற்றிய காளத்தியப்பர்.
என் வலப்பக்கத்திலே எப்போதும் நிற்க! என்றருளினார்.
இதனால் பெற்ற பேறு வேறு என்ன உண்டு.
அன்புடன் வேடவரையும் — கண்ணப்பரையும்
காளத்தியப்பனை சேர்ந்து வழிபடுவோம் என்று இவரையும்
வணங்கினார் அந்தணர்.

# 3. வளன் சனித்த படலம்

(ஜோசப்பு, யோசேப்பு, சூசை என்னும் சொற்களுக்கு (வரத்தின்) வளங்களையுடையவன் என்பது பொருள். ஆகவே, தமிழ் மொழியால் வளன் என்று சூசை முனிவரை அழைப்பது பொருந்தும். இப்படலம் காப்பியத் தலைவனாகிய வளன் பிறந்த செய்தியைக் கூறுவதாகும்.)

வளம் மிகுந்த எருசலேம் நகரைத் தாவீதன் என்னும் ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவன் போரில் பிறரால் வெல்லப்படாதவன், தவத்தால் தன்னை வென்றவன். வானவரும் விரும்பும் நல்லியல்புகள் அமையப் பெற்றவன். அவன் நீதி முறையும் தவமும் வேதமும் படர்ந்து வளர்தற்குரிய ஒரு கொழுகொம்பு போல இந்நிலத்து விளங்கினான். பகைவர்க்குப் பேரிடியாகவும் நண்பர்க்கு இன்னமுதாகவும் வாழ்ந்து வந்தான். அவன் இளமைப்பருவத்தில் நிகழ்த்திய வீரச் செயலே அவனை அரசனாக்கியது.

இஸ்ரவேலர்களின் அரசனாகிய சவுல் ஆட்சி புரிந்த போது, தெய்வ ஞானமற்று மலையிடங்களில் வசித்து வந்த பிலிஸ்தியர் சேனைகளுக்கும், வேத கட்டளையைப் பின்பற்றி வந்த சவுல் அரசன் சேனைகளுக்கும் போர் நடைபெற்றது. பிலிஸ்தியர் சேனையில் கோலியாத்து என்னும் ஓர் இராக்கதன் இருந்தான். அவன் வாளை இடையிற் செருகி, கார்மேகம் போன்ற தோளிலே கேடயத்தைத் தாங்கி, சூரியனைத் தூண்டி நடத்துவது போன்ற ஈட்டியைக் கையிலேந்தி, கண்களிற் கோபக் கனல் வீச போர் செய்ய வந்தான். வந்து, “என்னோடு போர் செய்ய வாருங்கள்; போரில் தோற்றவனும் அவனைச் சேர்ந்தவர்களும், வென்றவனுக்கும், அவனைச் சேர்ந்தவர்களுக்கும், அடிமையாக வேண்டும்,” என்று சூளுரைத்து வீர நகை செய்து இஸ்ரவேலரைப் போருக்கு அழைத்தான். இஸ்ரவேலர், ‘இது ஒரு பெரிய மாமிச மலையோ, பேயோ, பூதமோ என்று எண்ணிப் பயந்து மதி மயங்கினார்கள். கோலியாத்தைக் கண்டு இஸ்ரவேலர்

கள் ஓட்டம் பிடிக்கவே, அவர்களின் அரசன் சவுல் அவ்வரக்கனை வெல்பவருக்குத் தன் மகளை மணஞ்செய்து தருவதாக வாக்களித் தான்.

இங்ஙனம் நாற்பது நாட்கள் கழிந்தன. இப்போரின் விவரத்தை அறியாத தாவீதன், இஸ்ரவேலர் சேனையிலிருந்த தன்னுடைய மூத்த சகோதரர்களைக் காணச் சென்றான். அங்கே கோலியாத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு அவனைத் தான் வெல்ல முடியுமென அறிவித் தான். அவனைப் பார்த்ததும் சவுல், "மலையையும் பிடுங்கி எறியும் ஆற்றலுள்ளவன் முன் நீ எம்மாத்திரம்" என்றான். அதற்குத் தாவீ தன் "காற்றாடியைத் திருகி அழிக்கும் சுழல்காற்றைப் போல் என்னை எதிர்த்து வரும் சிங்கம் புலி கரடிகளையும் திருகி அழித் துக் கொன்று விடுகிறேனே; அரக்கனை அழிப்பவன் அவற்றைவிட வலியவனோ" என்று கூறினான். அது கேட்ட அரசன் 'அங்ஙன மாயின் நன்று' என்று கூறித் தாவீதனுக்குத் தன் உடைகளையும் அணிகலன்களையும் ஆயுதங்களையும் கொடுத்தான். தாவீதன், 'அவற்றை நான் அணிந்து பழகவில்லை' எனக் கூறி ஐந்து கற்களையும் ஒரு கவணையும் மட்டும் எடுத்துச் சென்றான். வேதியர் ஆசி கூறினர். இஸ்ரவேலர் ஆரவாரித்தனர்.

கோலியாத்து, ஆரவார முழக்கமோடு தன் எதிரே வரக்கண்ட தாவீதனை நோக்கி, "அடா! பயலே! மதயானையை எதிர்த்துப் போர் செய்ய நாய் வருவது உண்டா? நான் உனைப் பிளந்து எறிவிட்டால் நீ ஒரு சிறு பருக்கையாய் இப்புழுக்களுக்கு ஆகாரம் செல்வாய் அடா" என்றான். இதனைக் கேட்டதும் தாவீதன், "அடா! உனது வலிமையெல்லாம் வேலின் வலிமையே; எனது வலிமையோ இறைவன் திருக்கரத்தின் வலிமை. நானே உன்னுடைய உடலைப் பறவைகளுக்கு உணவாகச் செய் கிறேன் பார்" என்று கூறி, கவணைச் சுழற்றிக் கல்லை எறிந்தான். கோலியாத்து நெற்றியில் பட்டு இரத்தம் பீறிட்டு வீழ்ந்தான். அவன் தலையைத் தாவீதன் வெட்டினான்; பகைவர்கள் முறியடிபட்டு நாசமடைந்தனர். இவ்வீரச் செயலால் தாவீதன், மன்னன் மகளை மணந்து அரசனானான். நாற்பதாண்டும் ஆண்டு சிறந்த தாவீதரசன் விண்ணுலகில் வாழ்பவர் போல் இவ்வுலகில் எவ்விதக் குறையுமின்றி வாழ்ந்தான். ஒரு நாள் கடவுள் 'உனது சந்ததியில் தோன்றும் ஒரு



புத்திரனால் உன்னை மகிழச் செய்வேன்; அவன் அரசு மகிழ்ந்திருக்கும் செங்கோல் நடத்தும் வரத்தைப் பெறும்படி கருணை செய்வேன்,' என்றார். (இந்தத் தாவீது மன்னன் மரபில் பிறந்த ஆணையே கடவுள் கூறிய மரபுமாகவும் தோன்றும். இது இயேசுவைக் குறிக் காதே மனின், தோன் மரபினை ஆண்டது அரிய சொல்லன்று; ஆதலால் கடவுள் வாக்கு ஆணைப்பதையே குறிக்கும். மேலும் நகை அவர் மரபில் பிறந்தும் கைத்தொழில் செய்து உணவு பெற்றுப் புண்ணியங்களால் மூழ்வுகளை வேண்டும் என்பதே இறைவன் திரு வுளம்.)

தாவீதரசன் மரபில் பிறந்த சகோபு என்பவனது தேவியாகிய நீக்கி என்னும் பெண் கருப்பமுற்றாள். அப்பெண்ணின் கருப்பத்தி லேயே குழந்தையின் பழ வினையாகிய "*1 சென்மப் பாவம் இறை வனால் நீக்கப்பட்டது. அதனால் தாயின் முகம் தேவகாந்தி பெற்று விளங்கியது. நீக்கி பிரசவ வேதனையின்றிக் குழந்தையைப் பெற் றெடுத்ததும், மாதர்கள் வந்து கூடி அவனது தெய்வீக அழகைக் கண்டு 'இவன் ஆண்டவன் திருவடிகளுக்கு உவகை செய்யும் குவிந்தார் மனையாளன்' என்று வாழ்த்தினர்.

தாய் பெரு மகிழ்ச்சியோடு குழந்தையை எடுத்து நெற்றியில் வைத்து 'ஆண்டவனே! என் குழந்தை வளர்பிறை போல் வளர்ந்து அருள்வாய்' என்று வேண்டினாள். அப்பொழுது ஆகாயத்தில் "அருந்தவன் சிறப்பால் இவன் என் மார்பில் அணியும் *2 தேம்பாவணி யாவான்" என்று ஒரு குரல் கேட்டது. வானவர்கள் கூடி களித் திலைத்தனர். விண்ணின் மேடு இறங்கி, மலர்களை மேல் பொழிந்து, 'இம்மகவு கதிரவன் திருவுருவோ, முனிவர்களின் தவவுருவோ, வேதப் பொருளை விளக்க வந்த அருள் உருவோ' எனப் பலவாறு புனைந்து புகழ்ந்தனர்.

---

*1 ஆதாமின் சென்மப் பாவம் கருவிலேயே நீக்கப்பட்டது என்பது திருச் சபையின் கருத்தன்று. இந்தக் காப்பியத் தலைவனாகிய சூசை தன்னிகரில் தலைவன் எனக் காட்டவும், மற்றோர் மனத்தை அவன் மாட்சியில் ஈடுபடுத்தவும் கருதிய புனைவாகும்.

*2 காப்பியத் தலைவராகிய சூசையப்பருக்குக் கவிஞர் அளித்த மாலை இட்ட 'தேம்பாவணி' என்னும் பெயரே நூலின் பெயருமாயிற்று.

# காப்பியம்

## சீறாப்புராணம் – பாத்திமா திருமணப்படலம்

சிந்தை அள்ளும் சீறா என்று போற்றப்படும் சீறாப்புராணத்தை இயற்றியவர் உமறுப்புலவர்.

14-ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த மாலிக்காபூரின் படையெடுப்பிற்குப் பின் தமிழகத்தில் இசுலாமிய சமயம் பரவியது. 17 ஆம் நூற்றாண்டு முதல் இசுலாமிய இலக்கியம் செழித்து வளர்ந்து வருகிறது.

சீறா என்பது சீறத் என்னும் அரபுச் சொல்லின் திரிபாகும். சீறத் என்பதற்கு வாழ்க்கை வரலாறு என்று பொருள். சீறாப்புராணம் முகமது நபியின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகிறது.

நூல் அமைப்பு முறையில் 3 காண்டங்கள் உடையவை அவை (1) விலாதத்துக் காண்டம் (2) நுபுவத்துக் காண்டம் (3) ஹிசுறத்துக் காண்டம்

92 படலங்களை உடையது. 5027 - பாடல்களை கொண்டவை.

விருத்தப்பாவால் அமையப்பெற்ற யாப்பு வகையைக் கொண்டது.

காப்பிய இலக்கணப்படி நாட்டுப்படலமும் நகரப்படலமும் அமைந்துள்ளது.

நபியின் நாடாகிய அரபு நாட்டு வருணனை தமிழ்நாட்டு வருணனை போன்றே விளங்குகிறது. உமறுப்புலவர் வருணிக்கும் மெக்கா நகரம் மதுரை நகரைப் போன்றே காட்சி அளிக்கிறது.

சீறாப்புராணம் முற்றுப் பெறுவதற்கு முன்பே உமறுப்புலவர் மறைந்து விட்டதன் காரணத்தால் இவர் பாடாது விட்டுவைத்த பகுதியைப் பனி அகமது மரக்காயர் என்னும் புலவர் பாடி முடித்தார்.

# பாத்திமா திருமணப் படலம்

இஸ்லாமிய மெய்ம்மார்க்கமானது ஓங்கும் வண்ணம்
தினந்தோறும் அற்புதங்கள் அதிகரித்து எல்லா இடத்தும்
பரவும்படி செங்கோலினது நீடுங்கையுடைய
அரசாட்சி செய்கின்ற மதினா மாநகரத்தின் தலைவன்
நபிகள் பெருமானார். அவர்.

ஆதியவன் மொழிமறாது ஆண்டவர்க்கரசர் சகலும்
ஓதுமறையவர்கள் போற்றப் பொருவில்லானவர்கள் —வாழ்த்த

கரிய நிறத்தைக் கொண்ட கூந்தலையுடைய காரிகையரான
பாத்திமாவின் வாழ்க்கையினது வரலாற்றினை கூறுவோம்.
நபிகள் பெருமானார் நபிமுகமது முஸ்தபா அவர்களுக்கும்
கிருபை பொருந்திய நாயகியாரான கதீஜா அவர்களுக்கும்
பிறந்த சிறுமியர்கள் நான்கு பேர் அவர்களில்

'கோதறத் திரண்டு சோதிக் கொழுமென அருக்கனோன் —டோங்கி
மாதர்குலமென்ன மாநிலத்துதித்த பாவை.

பெண்களின் திலகமைப்போன்று மகத்தாகிய பாத்திமா.
இப் பூமியின் கண் அவதரித்த பாவையாவாள்
கதிர்த்தட்டு தீபமென்னக் கட்புலனுக்கு சோதி"
பெண்களின் பாவச் சமுத்திரமாகிய அந்தகாரத்தை
ஒட்டுகின்ற பெரிய பிரகாசத்தைக் கொண்ட தீபத்தைப்
போன்று பேரழகு பிரகாசிக்கின்ற சோதியானவர்.
நபிகட் பெருமானார் நபிமுகம்மது முஸ்தபாவின்
பிராணனை யொத்த புத்திரியென்று பாத்திமா அலி
அவர்களைச் சிருட்டித்தான்

பாத்திமாவின் முக அழகு ஒப்பாகவும் நாங்கள்
இல்லை என்று ஆகாயத்தில் காணப்படும் கிரகணங்கள்
தினந்தோறும் மாறி வருகின்றன. பாதங்களின் நிறம்
சிவந்ததாக காணப்படுவதற்கு சூரியனின் கதிர்களுக்கு
ஒப்பாக உவமையாக்கப்படுகிறது

" சுற்றிலும் பருதி வெய்யோன் சுவட்டடிச் சேப்புச் சேயப்
பெற்றனன் மடந்தை இன்னடித் தழுவிற் பெற்று வெனன்"

## பருவ வயது

பூமியினிடத்திலுள்ள பெண்களின் கற்பென்று
சொல்லுகின்ற பாத்திமா தினந்தோறும் தவமும், கற்பும்
கீர்த்தியும் பணிந்து துதிக்கின்ற சித்தத்தைக் கொண்ட
அருமையான வேதவசனத்தின் வண்ணம் அவருடைய
புண்ணியம் யாவும் தொலையாத வழி நடக்கும்
'நுண்ணறிந் தருமமியாவுந் தொடர்பழி நடக்கு நாளுந்
கண்ணகின் புவியிற் பாவை கற்பெனு மரசிக் கன்றே.'

தேவலோக அரம்பையர்களுக்கும் சுவர்க்கத்தில் உள்ளவர்களுக்கும் பூமியில் உள்ள
பெண்களுக்கும் ஒப்பற்ற நாயகியாக பாத்திமா றலியல்லாகு
அன்ஹா அவர்களுக்கு பொருந்திய பெற்றியை வகுத்துச்
சொல்வார் யாவர்? ஒருவருமில்லர்
'மாணிழை மடந்தைக்குற்ற பெற்றியார் வகுக்க வல்லார்'
கதீஜா றலியல்லாகு அன்ஹா அவர்களுக்கு பிறந்த
பாத்திமா றலியல்லாகு அன்ஹா ஹாற்கு நிகரானவர் எவருமில்லை.
" கவ்வடர் கரிய வாட்க ணகத்திடை வரிக ளோடிப்
பவ்வமும் பசப்புந் தன்னைப் பருவம்வந் திறுத்த தன்றே."
வாளைப் போன்ற விழிகளின் நடுவாக இரேகை ஓடிப்
பசிய தளிரானது பசப்புற்றதைப் போன்று பருவமானது
வந்து தங்கிற்று
'கழைநெடுங் கழையாற் செவ்விதாக் கதிர்மணி திரித்தல் போல
மழகடம் புதல்வர்க் கின்பப் பருவம்வந் தடைந்த தன்றே.'
சொர்ண வடிவமான மலரிடத்து செந்நிறத்தைக் கொண்ட
வாசனையானது வந்து தங்கினதை நிகர்த்தும் கொடியின்
கண்ணுள்ள பூவாய் பொருந்திய செழிய தேனானது
நிறைந்ததை நிகர்த்தும் போன்று பாத்திமா அவர்களுக்கு
இன்பத்தைக் கொண்ட பருவகாலமானது வந்து சேர்ந்தது.
திரவியத்திற்கு ஒப்பான பாத்திமா அவர்களை
ஆவாகஞ் செய்வேனென்று சொல்லுபவர்கள் யாவர்?
யான் ஆவாகஞ் செய்வேனென்று மனம் ஏக்குறுவாரும்.
ஒருவருமிலர் என்று
'' வரிசையும் பேறும் வேத வாய்மையு முறை நிறைந்து
யரசருக் கரசர் செல்வத் திரும்பொரு ளனைய செல்வி''
என்கிறார் உமறுப்புலவர்.

தௌறாத்து இஞ்சீல், சபூர், புறுக்கானென்னும் நான்கு வேதங்களுக்கும்
தலைவரான நாயகம் நபிகட் பெருமானார் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
பெற்ற சேனைகள் பொருந்திய கிளைகளையும், கருநிறத்தைக்
கொண்ட கூந்தலையுடைய மங்கையாகிய கதீஜாவை இன்பந்
கொண்ட பீவி பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்களின் ஆவாகத்தை
அரும்பிப் புனையக் கொண்ட முறுக்கானது அவ்வாறாவே
நிற்கும் பூ மானவனையவனிடத்து தோன்றிய மலைகளையுடைய
அரசர்கள் ஒன்று சேர்ந்து ஒருவர்க்கொருவர் உட்பட்டு
திங்களின் மணமெண்ணத் தொடங்கி வார்த்தைகளைப் புகழ்ந்து வருவாரும்.

"புரிமுழுக் கவசந் தொங்கற் புயவரை யரசர் பேடு
யொருவருக் கொருவ ரொன்றாய் முறைமையாற் பகர்ந்தவரே."

என்றனர்.

"வழுவறு மொழுங்கு நீதி வணக்கமு மறிவும் பூத்த
தொழுமட மயிலைச் சேர்க் கொக்கொடுந் திறமை செய்யப்
பாத்திமாவை விவாகஞ் செய்திருக்கப் படுபவர் யாவரோ?

என்கின்றனர்.

பாத்திமாவின் விவாகத்தை நாயகப் பெருமானார்
நபிகள் அபூபக்கர் அவர்களின் தெய்வீகத் தன்மைய
சந்நிதானத்தில் போய்க் கேள்விகளைக் கேட்டுக் கொண்ட
திசைதோறும் திங்களின் உறவினர்களிடம் அனுப்புந்தும்

'பாரதக அரசர் செவ்வாய்ப் பெண்களி வதுவை வேண்டி
யரைதிரைப் பரவை யாடை யம்புவி முழுதுங் காத்து.

ஆண் சிங்கத்தை நிகர்த்த இவ் அரசர்கள் பாத்திமாவை தங்களுக்கு
விவாகம் செய்து தந்தால் நாங்கள் இரத்தினங்கள் பதித்த
பொன்னினால் செய்யப்பட்ட ஆபரணங்களும் இலங்கையான
ஒளிர்கின்ற முத்துக்கள் பதித்த பெரிய மணி வடங்களும்
கணக்கற்ற திரவியங்களும் மகர்வாக முன்னர் தருகின்றோமென்று
பணிந்து காத்திருந்தார்களும் உண்டு

'தருகுவம் வதுவை யெம்பா லளித்திடு வென்னத் தாழ்ந்து
கருதல ரிடமே நின்னார் காசினி யோர்க வாறே

உலக மன்னர்கள் எல்லாம் இவ்வாறு வார்த்தைகளைக் கூற
நாயகப் பெருமானார் தம் மகள் பாத்திமாவின் விவாகத்தை
வல்லவனான இறைவன் அருளுடன் அல்லாவின் திருவுளப்
படியே யல்லாமல் யான் செய்வதில்லையென்றார். இதனால்
ஒருவரும் மேலதிகமாக பேச்சைப் பேசவில்லை.

'மறைமலர் வதன வள்ளல் மங்கைதன் வதுவை வல்லோன்
திருவுளப் படிய தன்றிச் செய்வதின் றெனச் செப்பி.

பாத்திமா அவர்கள் வாழ்க்கைத் துணையாக வர நிற்கும்
மேன்மையைப் பார்த்து ஆண் சிங்கத்தை நிகர்த்த காளைப்
பருவத்தைக் கொண்ட செவ்வையாகிய இளங்கையுடைய
அலி யவர்களை அப்பெரியார் தேர்ந்தெடுத்து அங்கு அவர்கள்
திங்களின் மனதின்கண் பாரதி தினமே மோகமான முடிவாக
பெற்றார்கள்.

'செவ்விய வலியார் காதல் இடையுயர் வாரும் ஆற்றார்.
திங்களின் மனதின்கண் விரும்பிய இந்தத் தனையுஞ் சிந்தித்து
வணக்கமாக முடிவாக கருத்தினால் இதயமாக
துன்பமறப் பெற்றார்கள்.

'வணக்கமா றீற்றி னெண்ணத் திருமண வதுவைநாளால்'

~~[?]~~ மின்னலைப் போலும் வடிவத்தைக் கொண்ட
பெற்ற பெண்ணைப் பருவத்தைத் தாங்கியவர்களான பாத்திமா
-வின் இன்பத்தை ஆகும் அரசர் மனமானது
அலை பாயுது அந்த நாலு நாலு பக்கமாகு அங்கு அவர்களின்
எண்ணத்தைக் கூற வல்லவர்கள் யாவர்? ஒருவருமில்லர்.

1 பண்ணொடு நாளிற் காம மேதத்தினுட் பகுத்துப் பாவை
தண்ணளவத் திகிரும் வேந்தர் கருத்தையார் சாற்ற வல்லார்.

அலை பாயுது அந்த நாலு நாலு பக்கமாகு அங்கு வான் காதில்
என்றும் தெளிவுபடுகிறது.

பாத்திமாவின் அழகு

1 ஒளிநிலைப் புருவ வாட்கட் கொடியனைக் கனிய வாய்த்து
களியொழுகு அழிவன் மேரு காரினை நேர்ந்த நாமு

பாத்திமாவின் இன்பத்தை ஆகும் தங்களின் சித்தனைப் பரு
தாக்கத்தையும் மெய்யும் மிகமாக தோன்றிய மேலும் பொருந்திய
மிகு மேன்மைக் கொண்ட யானையைப் பார்த்து ஆசையினால்
நெகிழ்கின்றனர்.
அலை நாலு பக்கமாக அங்கு வான் இரு தோள்களும் செறிந்ததைப்
பெற்று மேரு மலையைப் பார்த்தது.

1 வெயில்படு மணியின் வாய மென்மையர் மெலிந்த வன்றே

பாத்திமா அவர்களின் மயக்கமாகிய ஆபரணத்தினால்
வெயிலில் பட்ட புஷ்பத்தைப் போலும் வாட்டமுற்று
மெருகுவாய் மெலிவடைந்தனர்.

1 பெண்கனி பருவத்தார்ந்த பேரெழிற் கடலாழ்ந்து
கண்களின் மனத்துந் தோன்று முருவன்றிக் காண்கிலாரே.

பெரிய அழகாகிய சமுத்திரத்தில் மூழ்கித் தங்களின் விழிகளில்
மனத்திலும் தோன்றுகின்ற உருவன்றித் தோற்ற மல்லாது வேறொன்றையும்
காணார்கள்.

<u>தொகுப்பு</u>: இஸ்லாமிய மார்க்கத்தினை எடுத்துரைக்கும்
வகையில் சீறாப்புராணம் அமைந்துள்ளது.
சீறாப்புராணத்தை இயற்றியவர் உமறுப்புலவர்.
பாத்திமா திருமணப்படலத்தில் ~~பாத்திமா~~ நபிகள்
பெருமானார் நபி முகம்மது முஸ்தபா ஸல் அவர்களுக்கும் கதீஜா அவர்களுக்கும்
பிறந்தவர் பாத்திமா. பாத்திமாவின் உருவ வருணனை
உவமை நயத்துடன் எடுத்துரைக்கப்படுகிறது. பருவ வயது
குறித்த செய்திகள் எடுத்துரைக்கப்படுவதுடன் திருமணம் பேசி
செய்து கொள்வதற்காக மன்னர்கள் போட்டி போட்டுக்கொண்டும்
அந்த பொருள்களைக் கொடுத்து திருமணம் செய்து கொள்கிறேன்
என்று பெண் கேட்கும் படலம். பாத்திமா நாயகி மணவாளனை
வல்லவரை நினைத்துப் பார்க்கும் காட்சி வெளிப்படுகிறது.